செ.வெ.எண்: 265 நாள்:23.04.2018

திருநெல்வேலி மாவட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள்டிவி இ சேவை மையத்தில் TNPSC தேர்வில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்காக சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி மாவட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள்டிவி இ சேவை மையத்தில் TNPSC தேர்வில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்காக சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யும் பணிகள் துவக்க நிகழ்ச்சி இன்று (23.04.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பதிவேற்ற பணிகளை தொடங்கி வைத்தார். மேலும் பதிவேற்றம் செய்யப்பட்டதற்கான ஒப்புதல் சீட்டினை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தாதவது:-

டிஎன்பிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ் சரிபார்ப்புக்காகவும், வாய்மொழித்தேர்வு / கவுன்சிலிங்க்காகவும் என இரண்டு முறை சென்னை சென்று வர வேண்டியிருந்தது. தற்போது அதிக தொலைவில் இருந்து வரும் தேர்வாளர்களின் நலனை கருத்தில் கொண்டு சான்றிதழ் சரிபார்ப்புக்கென சென்னை வருவதை குறைக்கும் வகையில் அவர்களது அனைத்து சான்றிதழ்களையம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இ-சேவை மையங்கள் மூலமாகவே பதிவேற்றம் செய்யலாம் என தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிவரும் தேர்வுகளில் சான்றிதழ் சரிபார்ப்புக்காக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய சென்னை அலுவலகத்திற்கு வந்து செல்ல வேண்டியதில்லை. இதன் முதற்கட்டமாக தற்போது குரூப் 2ஏ தேர்வுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பணிக்காக காத்திருக்கும் தேர்வாளர்கள் தங்களது அசல் (Original) சான்றிதழ்களை தங்களது பகுதிகளில் உள்ள இ-சேவை மையங்களின் மூலமாகவே பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் மண்டல அலுவலகங்கள், 15 வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன இ-சேவை மையங்களில் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யலாம். மேற்படி சான்றிதழ்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய ஒரு பக்கத்திற்கு (A4 Size) ரூ.5/- கட்டணமாக வசூலிக்கப்படும். சான்றிதழ் பதிவேற்றம் செய்து முடித்த பின்னர் உரிய படிவத்தில் சம்பந்தப்பட்ட தரவு உள்ளீட்டாளரால் ஒப்புதல் இரசீது வழங்கப்படும். பதிவேற்றம் செய்யப்படும் சான்றிதழ் A4 அளவில் மட்டுமே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் A3 அளவு Legal அளவு உள்ளதை மாற்றி கொண்டு வர வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் டிஎன்பிஎஸ்சி தேர்வாளர்கள் இந்த வசதியினை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரி நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், கேபிள்டிவி வட்டாட்சியர் திரு.தங்கராஜ், கலால் வட்டாட்சியர் திரு.பால்துரை, வருவாய்த்துறை உதவியாளர் திரு.நவாஷ் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.